<u>அறிவிப்பு</u>

மயிலாடுதுறை மாவட்டம்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

வட்ட அலுவலகம், தரங்கம்பாடி

அறிவிக்கை எண்.ந.க.2281/2025/அ5

நாள். .07.2025

மயிலாடுதுறை மாவட்ட வருவாய் அலகில் தரங்கம்பாடி வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு கிராம உதவியாளர் பணிகள் சிறப்பு விதிகளின் கீழ் நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு கல்வி தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

| | |
|---|---|
| விண்ணப்பம் பெறப்படும் நாள். | 07.07.2025 முதல் |
| விண்ணப்பம் சமர்பிப்பதற்கான கடைசி நாள். | 05.08.2025 மாலை 5.45 மணிக்குள். |
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| பணி விதிகள் | தமிழ்நாடு கிராம உதவியாளர் பணிவிதிகளின் சிறப்பு விதி |
| சம்பள விகிதம் | ரூ.11100-35100/- |
| வட்டத்தின் பெயர் | தரங்கம்பாடி |
| நிரப்பப்பட உள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 01 |

கிராம உதவியாளர் காலிப்பணியிடம் உள்ள கிராமம்

| வ.எண். | வருவாய் கிராமம் | காலிப்பணியிடம் |
|---|---|---|
| 11. | 53. நெடுவாசல் | 01 |

| | |
|---|---|
| தரங்கம்பாடி வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை -1 | இனசுழற்சி விவரம் |
| | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர (BC) முன்னுரிமை பெற்றவர் -பெண் |
| இன சுழற்சி எண். | 47 |
| காலிப்பணியிட எண்ணிக்கை | 01 |

முன்னுரிமை பெற்றவர் எனில் அ.ஆ.எண்.122, மனிதவள மேலாண்மைத் (கே2) துறை நாள்.02.11.2021-இல் தெரிவித்துள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படும்.

அரசாணை (நிலை) எண்.21, மாற்றுத் திறனாளிகள் (மா.தி.ந.32)நலத்துறை நாள்.30.05.2017ன்படி 4% இட ஒதுக்கீடு அளிக்கப்படும்.

**கல்வித்தகுதி**

1. விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் 10ம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர் தமிழை ஒரு பாடமாக பயின்று இருக்க வேண்டும்.

இதர தகுதிகள்

1. விண்ணப்பதாரர் அந்த வட்டத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
2. தேர்வு செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும் முந்தைய குற்ற பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து திருப்தி அடைய வேண்டும்.
3. அடிப்படை விதி 10-ன் படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
4. தேர்ந்தெடுக்க கூடிய நபரின் கணவரோ, மனைவியோ உயிரோடிருக்கும் போது வேறொரு திருமணம் செய்திருக்க கூடாது.

வயது வரம்பு (01.07.2025 அன்று)

குறைந்தபட்சம் வயது 21(அனைத்து பிரிவினருக்கும்) அதிகபட்ச வயது 32 வயது (பொது பிரிவினருக்கு) 37 வயது (இதர பிரிவினருக்கு (BC, BC(M), MBC/DNC, SC, SC(A), ST) மாற்று திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கு வயது வரம்பு உரிய அரசாணையிப்படி விலக்கு அளிக்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை

1. விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரர் புகைப்படம், கல்விச்சான்று, இருப்பிட சான்று ஆதார் அட்டை நகல், வாகன ஓட்டுனர் உரிமம் நகல், வகுப்பு சான்றிதழ் நகல், முன்னுரிமைச்சான்று நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.
2. மனுதாரர் தங்களது விண்ணப்பத்தினை நேரடியாகவோ அல்லது அஞ்சல்வழியாக, வட்டாட்சியர், வட்ட அலுவலகம், தரங்கம்பாடி, மயிலாடுதுறை மாவட்டம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்

வருவாய் வட்டாட்சியர்,
தரங்கம்பாடி.